அந்தஇடத்திலும்,35-க்குப் பதிலாக, 36-ஆவது நோடல் டவுனாக அதை ஆக்கிக் கொண்டு, அந்தத் திட்டத்தை நாம் நிறை வேற்றிட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி அவர்கள் முன் வந்தால் ''அதற்கு சின்னசாமி— கந்தசாமி கூட்டுத் திட்டம்'' என்று பெயர் வைக்கலாமா? (சிரிப்பு).

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: அரசிற்கு ஆட்சேபணை இல்லை (சிரிப்பு).

மேலூரில் வீட்டுவசதி வாரியம் மூலம் குடியிருப்புகள்

196*வினா எண். 1731 (திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை) அமைச்சர்கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி, மேலூரில் வீட்டுவசதி வாரியம் மூலம் குடியிருப்புகள் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே,

(அ) மேலூர் சட்ட மன்றத் தொகுதி, மேலூரில் வீட்டுவசதி வாரியம் மூலம் குடியிருப்புகள் கட்ட அரசிடம் திட்டம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

வேலை இடைக்காத இளைஞர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை

197(*வினா எண்.608(திரு. ஆர். சிங்காரம் மற்றும்திரு.ஆர்.எட்டியப்பன்: மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.

வேலை கிடைக்காத இளைஞர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை இரட்டிப்பாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

1989 மே 4]

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலையில்லாமல் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிந்து வைத்திருக்கின்ற இளைஞர்களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற நிவாரணத் தொகையை இரட்டிப்பாக ஆக்குகின்ற செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

(முற்பகல் 9-40)

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் தொகையை இரட்டிப்பாக்கும் சூழ்நிலை இல்லை என்று சொன்னார்கள். நாட்டில் இருக்கின்ற கஷ்டமான சூழ்நிலையில் படித்த பட்டதாரிகள் உண்ண உணவு இன்றி, உடுக்க உடை இன்றி, இருக்க இடம் இன்றி தவித்துக் கொண்டு இருக்கும் இந்த நிலையில் அதை நீங்கள் கட்டாயமாக உயர்த்துவதற்கு அல்லது சிறிது தொகையாவது உயர்த்துவதற்கு அரசு மீண்டும் பரிசீலனைச் செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிந்து வைத்து இருக்கின்ற இளைஞர்களுக்கு வழங்கப்படுகின்ற இந்தத் தொகை ஒருதற்காலிக ஏற்பாடே அல்லாமல் இது தான் நிரந்தரம் என்று எண்ணிக்கொண்டு இன்னும் அதிகமாக கேட்பது என்பது சரியான ஒரு ஏற்பாடாக நிச்சயம் இருக்க முடியாது. அவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதுதான் உரிய ஏற்பாடாக இருக்க முடியும். அதற்கான ஏற்பாட்டை இந்த அரசு தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறது.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மையங்களில் போடுகின்ற சத்துணவு இவர்களுக்கும் போட முடியுமா? என்று அறிய விரும்புகிறேன். அந்த அளவுக்கு கேவலமான சூழ்நிலையில் போய்க் கொண்டிருப்பதோடு, அதே நேரத்தில் அவர்களுக்கு எத்தனை ஆண்டுகளுக்கு அந்த உதவித் தொகை கொடுக்கப்படுகிறது? அதற்கு ஒரு எல்லை உண்டா? அந்த வருடத்தையாவது நீட்டித்துக் கொடுக்க முடியுமா என அறிய விரும்புகிறேன்.

[1989 மே 4

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அர்களே, அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலம்—3 வருடங்களுக்குத்தான் வழங்கப்படும். பட்டதாரிகள், முதுநிலை பட்டதாரிகள் இவர்களுக்கு 100 ரூபாய்; புகுமுகக் கல்வி, பிளஸ் 2 தேறியவர்களுக்கு 75 ரூபாய், பள்ளி இறுதி வகுப்பு தேர்ச்சிப் பெற்றவர்களுக்கு 50 ரூபாய் என 3 ஆண்டுக் காலத்திற்கு வழங்கப்படும். குழந்தைகளுக்குத் தான் சத்துணவு பெரியவர்களுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.டி.ஐ. படித்த வேலை கிடைக்காத மாணவர்களுக்கு இந்த உதவித் தொகை கொடுப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட காலமாக வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிந்து வைத்து வேலை இல்லாமல் இருக்கக் கூடிய, நான் ஏற்கனவே குறிப்பிட்ட பகுதியினருக்கு இதுவரையில் வழங்கப்பட்டுக்கொண்டு இருக்கிறது. தொழில் பயிற்சி நிலையங்களிலே பயிற்சி பெற்றவர்களுக்கு இவர்களோடு ஒத்துப் பார்க்கையில் மிக விரைவில் வேலை வாய்ப்பு கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. அவர்களுக்கும் காலதாமதம் ஆகும் என்ற நிலை ஏற்பட்டால் அது பற்றியும் இந்த அரசு பரிசீலிக்கும்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து 5 ஆண்டுக் காலம் முடித்தவர்களுக்குத் தான் இந்த உதவித் தொகை என்ற நிபந்தனை இருக்கிறது. அதுவும் 3 ஆண்டுகளுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது. எனவே இந்த 5 ஆண்டு நிபந்தனையை சற்றுத் தளர்த்தி 2 ஆண்டு காலம் முடித்தவர்களுக்கு அந்த உதவித் தொகை வழங்கப்படும் என்ற நிலைக்கு அரசு வருமா என்பதோடு வேலை கிடைக்கும் வரை அந்த உதவித் தொகையை வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

1989 மே 4]

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்த படி இது ஒரு தற்காலிக ஏற்பாடு—அவ்வளவு தான். இதையே நிரந்தரம் ஆக்கி இதிலே அதிகம் கொடுக்க வேண்டும் என்று கேட்பது அவர்கள் வேலை தேடுகின்ற முயற்சியைத் தடுத் விடும் அல்லது அதிலே உற்சாகம் இழந்து விடுவார்கள் என்ற காரணத்தாலே இந்த நிவாரண நிதி இதே அளவில் தொடரும்

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலம் முழுவதும் உள்ள வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று அறிய விரும்புவதோடு, ஒருவர் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் தன்னுடைய பெயரைப் பதிவு செய்து அதன்பிறகு அவருக்குத் திருமணம் ஆகி அவருக்கு மகன் பிறந்து அவரும் பதிவு செய்து அவருக்குத் திருமணம் ஆகின்ற வரையில் ஒரு இண்டர்வியூ கூட வருவது இல்லை. இந்தக் காலதாமதம் எதனால் ஏற்படு கிறது ? அதன் மீது அரசு மேற்கொள்ள இருக்கும் நடவடிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஒரு குடும்ப வினா மாதிரி இருக்கிறது.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், மூலக் கேள்வியோடு தொடர்பு இல்லாத ஒரு கேள்வியைக் கேட்டிருக் கிறார். அவர் இங்கே இரண்டு மூன்று தலைமுறைகளுக்கு வேலை கிடைக்கவில்லை என்கின்ற வகையிலே சொல்லி இருக்கிறார். அவர் சொல்லிய அநதக் கருத்துப் படி ஏதாவது ஒரு குறிப்பிட்ட நபர் அப்படி வேலை இல்லாமல் இருக்கிறார் என்று தெரிவித்தால் உடனடியாக இந்த அரசு கவ னிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்து வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு உதவித் தொகை வழங்கும்போது அத்தொகையை உயர்த்த இயலாது, ஆண்டுகளையும் நீடிக்க இயலாது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் இப்போது வழங்கக்கூடிய அந்தத் தொகை, வங்கிகளிலே அவர்களுக்குக் கணக்கு வைக்கப்

பட்டு, அந்த வங்கிக் கணக்குகளுக்கு அந்த உதவித் தொகை அனுப்பி வைக்கப்படுகிறது. அந்த இளைஞர்கள் அந்த வங்கிகளுக்குச் சென்று விவரங்களைக்கேட்டால் அவர்களுக்குச் சரியான விவரம் கிடைப்பதில்லை. அங்கே அவர்கள் அலட்சியப்படுத்தப்படுகிறார்கள். அதற்குப் பதிலாக, இந்த உதவித் தொகை பெறக்கூடிய அந்த இளைஞர்களுக்கு அரசே நேரடியாக தபால் மூலமாக அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுள்ள ஏற்பாட்டை பரிசீலனை செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்ற சங்கடங்கள் இருக்குமேயானால் மாற்று ஏற்பாட்டை இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி நல்லதம்பி அவர்கள் வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்தும் வேலை கிடைக்காமல் இப்போது சட்டமன்ற உறுப்பினராக ஆகியிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு ஒரு துணைக் கேள்வி அனுமதிக்கப்படுகிறது. (சிரிப்பு)

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதவித் தொகை 3 ஆண்டுக்காலம் கொடுக்கிறார்கள். ஆனால் ''by fair or foul means'' அங்கே பதிந்து வேலையைப் பெற்று விடுகின்றவர்கள் ஆயுள் முழுவதும் வேலையைச் செய்து, சம்பளத்தையும் ஊதியத்தையும் பெறுவதோடு, ஓய்வு காலத்தில் ஓய்வூதியமும் பெறுகிறார்கள். 20 ஆண்டுக் காலமாகியும் வேலை கிடைக்காதவர்கள் இந்த சொற்பத் தொகையை மாத்திரம் பெற்றுக் கொண்டு ஓய்வூதியத் திற்கும் வழி இலலாமல் இருக்கின்றார்களே அவர்களுக்கு, குறைந்தது 15 ஆண்டுக் காலம் ஆனால் வேலைக்கு உத்தரவாதம் உண்டு என்று சொல்கின்ற அளவிற்கு ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா? அவர்களுடைய பரிதாபமான நிலையை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் ஒரு அரசு ஆணையின் மூலமாக, தட்டச்சர், சுருக்கெழுத்தாளர், எழுத்தர்

ஆகியவர்களுடைய பெயர்களை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக பெறக் கூடாது என ஒரு தடை இருந்தது. அதன் காரணமாகத்தான், தட்டச்சர்கள், சுருக் கெழுத்தாளர், எழுத்தர் இவர்களெல்லாம் ஒரு குறிப்பிட்ட காலக் கெடுவில் வேலைவாய்ப்பே இல்லாமல் இருந்தார்கள். ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றவுடன், மன்றத்திலே மன்ற உறுப்பினர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் எடுத்துக் தெரிவித் ததின் அடிப்படையில் இந்த மன்றத்தில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று, எழுததராக தகுதி உள்ளவர்களும் 3 மாத காலத்திற்கு வேலைவாய்ப்பு இருக்குமேயானால் கூட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலேயிருந்து அவர்களுடைய பெயர்களைப் பெற்று வேலையில்லாதவர் களுக்கு வேலைவாய்ப்பு வழங்கலாம் என்கின்ற புதிய ஆணை யினை இந்த அரசு இப்போது வெளியிட்டிருக்கிறது. எனவே அப்படிப்பட்டவர்களுக்கு வேலை எளிதிலே கிடைக்கக்கூடிய அல் லது குறிப்பிட்ட காலக் கெடுவிலே கிடைக்கக்கூடிய சூழ்நிலை இப்போது உருவாகி இருக்கின்ற காரணத்தினாலே மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரமணி நல்லதம்பி அவர்களுடைய அச்சம் அகற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜெமினி கேப்சூல் தொழிற்சாலை

198—(வினா எண். 850) -திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்பு மிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.

கோவை குறிச்சியில் மூடப்பட்டுள்ள ஜெமனிகேப்சூல் தொழிற் சாலையைத் திறக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ,ஜெமினி கேப்சூல் என்கின்ற தொழிற்சாலை 1978-ஆம் ஆண்டு மருந்து உற்பத்திக் காகத் தொடங்கப்பட்டது. பின்னாலே 1988 ஆம் ஆண்டு பல்வேறு பிரச்சினைகளின் காரணமாக தொழிலாளர்களுடைய